**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை – ஆகஸ்ட் - 2020**

**A061 நாட்டுப்புறவியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'சொலவடை' என்பது எதைக் குறிக்கும்?
2. நாட்டுப்புறவியல் துறை சார்ந்து வெளி வந்துள்ள இதழ்களுள் இரண்டின் பெயரினை எழுதுக?
3. 'ஜேக்கப் கிரீம்' என்பவர் எத்துறையைச் சேர்ந்தவர்?
4. முத்துப்பட்டன் கதைப்பாடலில் வெளிப்படும் பிரச்சனை எது?
5. திருமலை நாயக்கரின் தளபதி பெயர் என்ன?
6. சொக்கர் என்னும் சொல் யாரைக் குறிக்கின்றது?
7. துரியோதனனை அல்லி விடுவிப்பதற்குக் காரணமாக இருந்தவர் யார்?
8. தொல்காப்பியர் சுட்டும் 'பிசி' எதைக் குறிக்கும்?
9. தமிழ் நாட்டுப்புறப் பாடல்களை முதன்முதலில் சேகரித்து வெளியிட்டவர் யார்?
10. அம்மை நோய்க்குக் காரணமான தெய்வம் எது?
11. தமிழ்ப் பழமொழிகளை ஆராய்ந்த அறிஞர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

12. எந்தெந்த கிழமைகளில் திருமண நாள் குறிப்பது நல்லது?

13. கன்னித் தெய்வங்கள் மொத்தம் எத்தனை?

14. தன்னிகரில்லாத் தமிழ் மருத்துவம் எது?

15. நமது உடலில் எத்தனை வகையான நாடித்துடிப்புகள் உள்ளன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. வாய்மொழி இலக்கியம் என்றால் என்ன?
2. உற்று நோக்கல் – குறிப்பு வரைக.
3. புகழேந்தியின் பெயரிலுள்ள படைப்புகள் யாவை?
4. கதைப்பாடலின் இயல்புகளைக் குறிப்பிடுக.
5. தோற்றக் கதைகள் குறித்து எழுதுக.
6. பழமொழியின் பயன்பாடுகளைச் சுட்டுக.
7. சடங்குகளின் நோக்கத்தினை விவரி?
8. விசக்கடி மருத்துவம் பற்றி விளக்குக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) அமைப்பியல் கோட்பாட்டினை ஆராய்ந்துரைக்க.

2. (அ) கதைப்பாடல்களில் காணப்படும் சாதிப் பிரச்சனைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) குன்னத்தூரான் கதைகளில் காணப்படும் நகைச்சுவை குறித்துக் கட்டுரை அளவில் விடை தருக.

3. (அ) வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளை விவரித்துரைக்க.

***